**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 57/2022**

பெயர் : கிட்டப்பா P.W.1.

த/பெ. : கோவிந்தசாமி

தேதி : 31.07.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி : –**

1. நான் கோவில் நிர்வாக்திற்கு 1432–1434 வரை பசலி ஆண்டிற்கான 242.43 குவிண்டால் நெல் நிலுவை பாக்கி உள்ளது என்றால் சரியல்ல. நாளது தேதி வரை மேற்படி நிலுவை பாக்கியான குவிண்டால் நெல்லுக்கு 1 குவிண்டால் ரூ.2,428/– என கணக்கிட்டு நான் கோவில் நிர்வாகத்திற்கு கட்ட வேண்டியுள்ளது என்றால் சரியல்ல. நிலுவை பாக்கி வந்த பிறகு நான் தாவா நிலங்களை வைத்திருக்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நில உரிமையாளருக்கு மேற்படி பாக்கி தொகையை வசூலிப்பதற்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. எனவே, மேற்படி கோவிலில் பகுதிதாரர் என்ற உரிமை எனக்கு அற்றுபோய்விட்டது என்றாலும், அதனால் நான் தாவா நிலங்களை கோவிலிடம் ஒப்படைக்க கடமை பட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு எவ்வித முகாந்திரமும் எனக்கு இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை 3ம் பிரதிவாதி கோவிலுக்கு ஒப்படைப்பதை காலதாமத படுத்த வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2. இந்து சமய அறநியைத்துறை நீதிமன்றத்தில் தாவா நிலத்திலிருந்து என்னை வெளியேற்ற 3ம் பிரதிவாதி கோவிலின் நிர்வாகம் வழக்கிடுவதிலிருந்து தவிர்பதற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற வழக்கு தாக்கல் செய்வதற்கு 3ம் பிரதிவாதி கோவிலுக்கு எல்லா உரிமையும் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து இந்த வழக்கை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு அதிகார வரம்பு இல்லை என்றால் சரியல்ல. அதனால் நான்கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

3.பிரதிவாதி கோவில் நிர்வாகத்தின் உரிமையை மறைப்பதற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நடப்பு பசலி 1435 ஆண்டிற்கான குத்தகையை நான் செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை. தை மாதம்

தான் செலுத்துவது வழக்கம். சென்ற பசலி ஆண்டிற்கான குத்தகையை செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன். 1432 முதல் 1435 பசலி ஆண்டிற்கான குத்தகை பாக்கியை நான் செலுத்தவில்லை என்றாலும், இழப்பீட்டு தொகையை மட்டுமே நான் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை தள்ளளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.